பக்கங்கள்:-26

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2058 | தை 03 | சனிக்கிழமை | 17.01.2026 | அதிர்வு 170

## 'பொங்கு தமிழ்' நினைவு நிகழ்வு இன்று யாழில்



ஈழத்தமிழர் போராட்டத்தின் நியாயங்களை உலக அரங்கில் முன்வைக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட 'பொங்கு தமிழ்' நிகழ்வின்நினைவுஇன்றுயாழ்ப்பாணம்பல்கலைக் கழகத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது. 06



# அன்று யுத்தம் இன்று போதை

## பிள்ளைகள் ஆபத்தில்; பெற்றோர்கள் அச்சத்தில் யாழில் ஜனாதிபதி அநுர கவலையுடன் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

"அன்று யுத்தம் காரணமாக தமது பிள்ளைகள் பற்றி பயந்து வாழ்ந்த வடக்கின் பெற்றோர்கள், இன்று போதைப் பொருள் காரணமாக தமது பிள்ளைகள் குறித்து அச்சத்துடன் வாழ வேண்டியுள்ளது."

- இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். 06









அரசியல் விவகாரங்களுடன் சம்பந்தப்பட்ட இரண்டு வழக்குகள் இன்று யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் நீதிமன்றங்களில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

அவற்றில் ஒன்று பற்றி நேற்றே இப்பத்தியில் குறிப்பிட்டு இருந்தேன். நீதிமன்ற விடுமுறைகளுக்கு மத்தியில் இந்த வழக்கு வருவதால் மன்று கூடுமா, விடயம் நீதிமன்றில் பரிசீலிக்கப் படுமா என்று சந்தேகம் தெரிவித்திருந்தேன். எனது ஐயத்தை உறுதிப்படுத்தும் விதத்தில் இப்போது இந்த இரண்டு வழக்குகளிலும் நீதிபதிகள் விடுமுறையில் இருந்தமையால் எதிர்பாக்கப்பட்ட முன்நகர்வுகள் வழக்கில் இடம்பெறவில்லை.

ஒரு வழக்கு யாழ்ப்பாணத்தில் இயங்கும் வடக்கு மாகாண மேன்முறையீட்டுக்கான மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மீளாய்வு மனு மற்றும் மேன்முறையீட்டு மனு ஆகியவை தொடர்பானது.

யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் உள்ளக விளையாட்டு அரங்கு அமைப்பதற்கு 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



# யாழ். நாக விகாரையின் விகாராதிபதியையும் நேற்று சந்தித்துக் கலந்துரையாடிய ஜனாதிபதி

(எஸ்.நிதர்ஷன்)

வடக்குக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று யாழ்ப்பாணம் ஸ்ரீநாக விகாரை சர்வதேச பௌத்த நிலையத்துக்கும் சென்றார்.

அங்குநாகவிகாரையின்விகாராதிபதி, வட இலங்கையின் தலைமை சங்கநாயக்க, வண. மீகஹஜந்துரே சிறிவிமல நாயக்க தேரரைச் சந்தித்து நலம் விசாரித்த ஜனாதிபதி, விகாராதிபதியுடன் சிறு உரையாடலிலும் ஈடுபட்டார்.

அதன்பின்னர் விகாரைக்கு வருகை தந்திருந்த மக்களிடம் அவர்களின் விவரங்களையும் கேட்டறிந்து சுமுகமாக ஜனாதிபதி உரையாடினார்.





# அமெரிக்கத் தூதுவர் விடைபெறுவதனால் பாற்சோறு சாப்பிட்டு மகிழ்ந்த கம்மன்பில

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சாங், நாடு திரும்புவது தொடர்பில் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார் முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில.

நான்குவருடகாலசாபம்முடிவடைகின்றது எனவும், இது பாற்சோறு சமைத்துக் கொண்டாட வேண்டிய தருணம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நெரூர் விசேட ஊடக சந்திப்பை நடத்தியே கம்மன்பில இவ்வாறு கூறினார்.

அத்துடன், ஊடக சந்திப்பில் பாற்சோறு சாப்பிட்டு மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தினார்.




ஜூலி சாங், 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் இலங்கைக்கான அமெரிக்காவின் தூதுவராகச் செயற்பட்டார். சுமார் 4 வருடங்களாக இராஜதந்திர சேவையின் பின்னர் நேற்று அவர் விடைபெற்றுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியில் உதய கம்மன்பில அமைச்சராகச் செயற்பட்டார். அப்போதும் அவர் அமெரிக்கத் தூதுவரைக் கடுமையாக விமர்சித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப்புலிகளால் அடைய முடியாத இலக்கை அரசியல் ரீதியில் பெற்றுக்கொடுக்க அமெரிக்கத் தூதுவர் முற்படுகின்றார் எனக் கடும் போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகள் குற்றஞ்சாட்டி வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.









# ‘முழு நாடுமே ஒன்றாக’ எனும் செயற்பாடு யாழில் நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பம்

**(எஸ்.நிதர்ஷன்)**

இலங்கையின் தேசிய பேரழிவாக மாறியுள்ள நச்சுப் போதைப்பொருட்களிலிருந்து எமது சமூகத்தை விடுவிக்கும் நோக்கத்துடன், அரசால் முன்னெடுக்கப்படும் “முழு நாடுமே ஒன்றாக” எனும் தேசிய செயற்பாடு, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் இன்று நேற்று யாழ்ப்பாணத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

“அகன்று செல்” என்ற தொனிப்பொருளில், யாழ். கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் நேற்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்ற இம்மாபெரும் மக்கள் பேரணியில் ஜனாதிபதி, அமைச்சர்களுடன், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனும் கலந்து கொண்டார்.

யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவிகளின் வரவேற்பு நடனத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில், யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர் ம.பிரதீபன் வரவேற்புரையை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் உரை ஆற்றி

தொடர்ச்சி▼



















# ‘முழு நாடுமே ஒன்றாக’ எனும் செயற்பாடு யாழில் நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பம்

தொடர்ச்சி▲

னார்.

போதை ஒழிப்பு நடவடிக்கைகளில் மிகச் சிறப்பான செயற்பாடுகளை வெளிப்படுத்திய பொலிஸ் உத்தியோகத்தர்களைப் பாராட்டி, ஜனாதிபதி கௌரவிப்புக்களை வழங்கி வைத்தார்.

நிகழ்வின் மிக முக்கிய அம்சமாக, போதைப்பொருட்களிலிருந்து விலகி இருப்போம் எனவும், சமூகத்தைப் பாதுகாப்போம் எனவும் உறுதியளிக்கும் “சத்தியப்பிரமாணம்” ஜனாதிபதி முன்னிலையில் ஆயிரக்கணக்கான மக்களால் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில் அமைச்சர்களான ஆனந்த விஜயபால, இராமலிங்கம் சந்திரசேகர், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெ.றஜீவன், க.இளங்குமரன், எஸ்.ஸ்ரீபவானந்தராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும், யாழ்ப்பாணம் மாவட்ட செயலர், மாவட்ட செயலக அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், பெருந்திரளான பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





















# யாழில் சாபக்கேடான அரசியல் முன்னெடுப்பு

## தமிழரசுக் கட்சி மீது அமைச்சர் சந்திரசேகர் பாய்ச்சல்



(எஸ்.நிதர்ஷன்)

"யாழ்ப்பாணத்திலும் சாபக்கேடான அரசியல் முன்னெடுக்கப்படுகின்றது. அவ்வாறான அரசியலில் இருந்தும் நாம் மீள வேண்டும்."

– இவ்வாறு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

"முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய செயற்பாடு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையில் நேற்று பிற்பகல் யாழ்ப்பாணத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

"அகன்று செல்" என்ற தொனிப்பொருளில், யாழ்ப்பாணம் – கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"போதைப்பொருளுக்கு எதிராக நாட்டு மக்களை அணிதிரட்டும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கொழும்பில் இதற்குரிய ஆரம்ப கட்ட நடவடிக்கை இடம்பெற்றது. 2ஆவது நிகழ்வு அம்பாந்தோட்டையில் நடைபெற்றது.

மூன்றாவது மாநாடு யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெறுகின்றது. போதைப்பொருள் பாவனைக்கு எதிராகக் கிராமிய மட்டத்தில் பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டு, மக்கள் அணிதிரட்டப்பட்டு வருகின்றனர்.

போதைப்பொருள் பாவனையில் இருந்து எமது இளைஞர்களை மீட்க வேண்டும். இளைஞர்கள் போதைப்பொருள் பிசாசிடம் சிக்காமல் இருப்பதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்க வேண்டும்.

போதைப்பொருள் என்ற அரக்கனுடன், சில அரசியல் அரக்கர்களும் இணைந்துள்ளனர் என்பது கசப்பான உண்மையாகும்.

யாழ்ப்பாணத்தைக் கட்டியெழுப்பும் போது யாழின் மரபுரிமை, கலாசாரம், கௌரவம், அடையாளம் என்பவற்றைப் பாதுகாத்து அதனைச் செய்யுமாறு ஜனாதிபதி எனக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதேவேளை, கொழும்பில் "கோட் சூட்"அணிந்து, யாழில் வேட்டியுடன் அரசியல் பேசும் நபர், யாழில் வரவுள்ள சர்வதேச மைதானத்துக்கு எதிராக வழக்குப் போடப் போகின்றாராம்.

எமது அரசால் முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளுக்கு எதிரானவர்களாக இவர்கள் மாறியுள்ளனர் என்பதை இது வெளிப்படுத்துகின்றது.

இந்த நிகழ்வுக்குத் தமிழரசுக் கட்சியினர் உட்பட எல்லோருக்கும் நாம் அழைப்பு விடுத்தோம். ஆனால் எவரும் வரவில்லை.

நிகழ்வுக்குப் போனால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என கிளிநொச்சி அண்ணனுக்குக் கோட்சூட் நபர் கூறினாராம். இப்படித்தான் சாபக்கேடான அரசியல் யாழ்ப்பாணத்தில் உள்ளது. இந்நிலையில் இருந்து நாம் மீள வேண்டும்." – என்றார்.







## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிராக விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவை இரண்டு வாரங்களுக்கு மேல் நீடிக்காமல் ஒருதலைப்பட்சமாக யாழ் மாவட்ட நீதிமன்றம் விலக்கியமையை ஆட்சேபித்து இந்த இரண்டு மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

நான் நேற்று இப்பத்தியில் குறிப்பிட்ட படி நீதிபதிகள் ரியாஸ் மற்றும் இராமக்க மலன் ஆகியோர் முன்னிலையில் இந்த மனுக்கள் நேற்று எடுக்கப்பட வேண்டி இருந்தன. ஆனால் நீதிபதி ரியாஸ் விடுமுறையில் இருந்தமையால் நீதிபதி இராமக்கமலன் முன் இந்த மனுக்கள் எடுக்கப்பட்டன. ஆயினும் ஒரு நீதிபதி யுடன் மன்று கூடிய காரணத்தினால் இந்த மனுக்கள் தொடர்பான எந்த முடிவையும் நேற்று மன்று அறிவிக்கவில்லை.

மேற்படி விளையாட்டு அரங்கு அமைப் பதற்கு இடைக்காலத் தடை விதித்த யாழ்ப்பாணம் நீதிபதி இரண்டு வாரங்க ளுக்கு பின்னர் அந்த இடைக்காலத் தடை உத்தரவு காலாவதியாகும் தினத்தில், அந்த இடைக்காலத் தடை உத்தரவைத் தான் நீடிக்க வில்லை என்று ஓர் உத்தர வைப் பதிந்து சென்றுள்ளார். ஆனால் அந்தத் திகதியில் அவர் விடுமுறையில் இருந்தார். விடுமுறையில் உள்ள நீதிபதி, அந்த விடுமுறைத் திகதியிட்டு உத்தரவு வழங்குவது முற்றிலும் தவறானது என இந்த இரண்டு மனுக்களையும் தாக்கல் செய்த ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் நேற்று நீதிபதி இராமக்கமலனிடம் எடுத் துரைத்தார். அது பற்றிய விடயங்கள் முழு வதையும் மிகக் கவனமாக செவிமடுத்த நீதிபதி, அடுத்த தவணையில் – பெப்ர வரி 13ஆம் திகதி – இரண்டு நீதிபதிகள் ஆயத்தில் தீர்க்கமான முடிவு எடுக்கப் படும் என்று கோடி காட்டி வழக்கை ஒத்தி வைத்திருக்கிறார்.

வழக்கில்மற்றொருஇடையீட்டுமனுதா ராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள யாழ் மாநகர துணை மேயர் இமானுவல் தயா ளன் சார்பில் சட்டத்தரணி கேசவன் சயந் தனும் எதிர்மனுதாரர்களில் ஒருவரான பிரதேச செயலாளர் சுதர்ஸன் சார்பில் சட்டத்தரணி துளசியும் முன்னிலையாகி னர்.

இதே சமயம் கடந்த நவம்பர் இறுதியில் பேரிடர் கால மீட்பு நடவடிக்கைகளுக்கு மத்தியில் கிளிநொச்சியில் பாதிக்கப்பட் டோருக்கு நிவாரணம் வழங்கும் பணி யில் ஈடுபட்டிருந்த கிராம சேவையாளர் ஒருவரை யாழ்ப்பாண மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தாக் கினார் என்று பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பான வழக்கு நேற்று கிளிநொச்சி நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது சந்தேக நபரான இளங்குமரன் நீதிமன்றில் முன்னிலை யாகி இருக்கவில்லை.

பாதிக்கப்பட்ட தரப்பின் சார்பில் முன்னி லையான ஜனாதிபதி சட்டத்தரணி சுமந் திரன் மன்றுக்கு வரத்தவறிய சந்தேக நபரான இளங்குமரனுக்கு எதிராக பிடிவி றாந்து பிறப்பிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தார். எனினும் நேற்று மன்றில் வழமையான நீதிவான் முன்னிலையாகியிருக்கவில்லை. அவர் விடுமுறையில் சென்று இருப்பதால் பதில் நீதிவான் ஒருவரே கடமையில் இருந்தார். அதன் காரணமாக பிடிவிறாந்து உத்தரவு எதுவும் வழங்கப்படவில்லை. ஆனால் வழக்கு அடுத்த செவ்வாய்க்கிழமைக்கு – 20 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டு, அன்றைய தினம் நிரந்தர நீதிவானி னால் இது பற்றித் தீர்மானிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயத்தில் ஆரம்பத்தில் தாக்கு தல் முறைப்பாடு தொடர்பாக நீதிமன்றுக்கு அறிவித்த பொலிஸார், இது குறித்து விசா ரித்து சந்தேக நபரான இளங்குமரன் எம்.பியைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்த வரும் செப்டம்பர் மாதம் வரை – அதாவது 10 மாதங்கள் கால அவகாசம் – நீதிமன்றத்தில் பெற்றிருந்த னர்.

இதனை அடுத்து பாதிக்கப்பட்ட தரப்பு சார்பில் நகர்த்தல் பத்திரம் சமர்ப்பித்து வழக்கை முற்கூட்டியே மன்றில் எடுப் பித்த ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன், மக்கள் பிரதிநிதி ஒருவரைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பத்து மாதம் காலம் இழுத்தடிக்கப்படுவதை ஆட்சேபித்திருந்தார்.

அதனை அடுத்து வழக்கு நேற்றைய திகதிக்கு இடப்பட்டிருந்தது.

நேற்று வழக்கு எடுத்துக் கொள்ளப் பட்ட போது பொலிஸார் இந்த வழக்குத் தொடர்பில் இளங்குமரன் பொலிஸ் நிலை யத்தில் முன்னிலையாகி வாக்குமூலம் அளித்த பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கின்றார் என்றும், அச்சமயம் அவர் நேற்றைய தினத் தில் (அதாவது ஜனவரி 16ஆம் திகதி) நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் என்பது அவருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது என்றும் மன்றுக்கு அறிய தந்தனர்.

அதனைப் பதில் நீதிவான் பதிவு செய்த பின்னர், வழமையான உரிய நீதி வானுக்கு முன்னர் வழக்கு எடுத்துக் கொள்ளக் கூடியதாக செவ்வாய்க்கிழ மைக்கு அதை ஒத்திவைத்துள்ளார்.

நேற்று வழக்கு நேற்று எடுத்துக்கொள் ளப்படும் சமயத்தில் நிரந்தர நீதிவான் கட மையில் இல்லாததன் காரணமாக இளங் குமரன் எம்.பிக்கு வரவிருந்து நெருக்கடி நான்கு நாள்களுக்குத் தள்ளிப் போய் இருக்கின்றது என்றே தோன்றுகின் றது.

## மோட்டார் சைக்கிளை வீதியில் பக்கம் மாறி செலுத்தியவருக்கு ரூ. 15 ஆயிரம் அபராதம்!

மோட்டார் சைக்கிளை வீதியில் பக்கம் மாறி செலுத்தியவருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இடது பக்கம் செல்வதற்குப் பதிலாக வலது பக்கமாகச் சென்ற இளைஞனுக்கே இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை, தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சிராஜ் நகரை சேர்ந்த 21 வயதுடைய இளைஞனுக்கு போக்குவரத்து சட்டத்தை மீறிய குற்றச் சாட்டில் கந்தளாய் நீதிமன்றம் ரூபா 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள் ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

97 ஆம் கட்டை சிராஜ் நகர் சந்தி யிலிருந்து மோட்டார் சைக்கிளில் வலது பக்கத்தில் இருந்து சுமார் 100 மீற்றர் தூரத் துக்கு இடது பக்கமாக சென்று திரும்ப வேண்டும் என்ற நிலையில் வலது பக் கத்தில் சென்ற போது போக்குவரத்து பொலிஸாரினால் நீதிமன்றம் செல்வதற் கான அபராதம் விதிக்கப்பட்டது.

குறித்த இளைஞன் கந்தளாய் நீதி மன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்ட போது குறித்த குற்றத்துக்காக 15 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக் கப்பட்டு பிணையில் செல்ல அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

இது போன்ற குற்றங்களுக்கான சரி யான தண்டனைகளை ஏனைய சிறிய சிறிய குற்றங்களுக்காக போக்குவரத்து பொலிஸார் தண்டனை வழங்கினால் போக்குவரத்து விதிமுறை மீறல்களை குறைக்க முடியும் என மக்கள் தரப்பில் எதிர்பார்க்கப்படுகிறது.

## 'பொங்கு தமிழ்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். பல்கலைக்கழக மாணவர்க ளால் இந்த நிகழ்வு 2001 ஆம் ஆண்டில் முதன்முறையாக நிகழ்த்தப்பட்டது. அதன் போது, தமிழ்த் தேசியம், தன்னாட்சி உரிமை, மரபு வழித் தாயகம் போன்ற மூன்று வேண்டுகோள்கள் முன்வைக் கப்பட்டன.

அந்தவகையில் இந்தப்"பொங்குதமிழ்" நிகழ்வானது வருடா வருடம் அனுஷ்க் கப்படுவது வழமை.

அதன்படி இன்று நண்பகல் 12 மணிய ளவில் யாழ். பல்கலைக்கழக "பொங்கு தமிழ்" தூபியில், "பொங்கு தமிழ்" நிகழ்வை அனுஷ்டிக்க அனைத்து மாண-வர்களும், பொதுமக்களும் உணர்வோடு அணிதிரள வேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

## அன்று யுத்தம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசியபேரழிவாகமாறியுள்ளபோதைப் பொருள் அச்சுறுத்தலை ஒழிக்கும் நோக் கில் செயற்படுத்தப்படும் "முழு நாடுமே ஒன்றாக" தேசிய செயற்பாட்டின் வடக்கு மாகாண நிகழ்ச்சி நேற்று பிற்பகல் யாழ்ப்பாணம், கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி மைதானத்தில் "அகன்று செல்" என்ற தொனிப்பொருளில் நடை பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகை யில்,

"போதைப்பொருளின் ஆபத்து எந்த இடம், எந்தப் பிரஜை, எந்த நகரம், எந்தக் கிராமம், ஏழை, பணக்காரன், சிங்க-ளவர் அல்லது தமிழர் என்ற வேறுபாடு இல்லாமல் பரவுகின்றது.

நாட்டின் இளைஞர்களை இந்த அச்சுறுத்தலில் இருந்து பாதுகாப்பதற் காக ஆரம்பிக்கப்பட்டுள்ள போதைப் பொருட்களை ஒழிப்பதற்கான தேசிய செயற்பாடு பலமாகச் செயற்படுத்தப்படும்.

அது பின்வாங்கப்படும் ஒரு செயற்பா டாக இருக்காது. அதற்காக, அனைவரும் ஒன்று சேர்ந்து நாடு முழுவதும் ஒரு பாரிய பாதுகாப்பு வலயமாகச் செயற்படுவோம்.

அதிகாரத்தை இழந்த இனவெறிக் குழுக்கள் சிறிய, சிறிய இடங்களில் இனவாதத்தை மீண்டும் தூண்ட முயற்சிக் கின்றன. அந்த இனவாதப் போக்குகள் எதுவும் நமது நாட்டில் மீண்டும் தலைதூக்க இடமளிக்கப்படமாட்டாது.

வடக்கு மாகாணத்தில் போதைப் பொருளுக்கு எதிரான நடவடிக்கைகளில் தீவிரமாகப் பங்களிக்கும் முப்படைகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோ ருக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்." – என்றார்.

# தலையில் தேங்காய் விழுந்ததால் யாழில் குடும்பஸ்தர் உயிரிழப்பு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் தலையில் தேங்காய் விழுந்ததால் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கோப்பாய் வடக்கு பகுதியைச் சேர்ந்த தம்பிராசா ஜெயச்சந்திரன் (வயது 60) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 12ஆம் திகதி கொக்கத் தடி மூலம் தென்னை மரத்தில் தேங்காய் பிடுங்கியுள்ளார். இதன்போது தோங்காய் அவரது தலை மீது விழுந்துள்ளது.

இந்நிலையில் அவர் தனது மனைவியிடம் விடயத்தை கூறியுள்ளார்.

அதன்பின்னர் அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்ப்பிக்கப்பட்டார். இதன்போது அவர் மயக்கமுற்றுள்ளார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.



அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.


# மரண அறிவித்தல்



தோற்றம்
27 ★ 04 ★ 1985

மறைவு
14 ★ 01 ★ 2026

தலவாக்கலை, மிளகு சேணையை பிறப்பிடமாகவும், கொழும்பு, பம்பலப்பிட்டியை வதிவிடமாய் கொண்ட

காலஞ்சென்ற திரு. திருமதி. சுந்தரம் தனலக்ஷ்மி ஆகியோரின் அன்பு மகன்

## திரு. தினேஷ் சுந்தர் (தினேஷ்) அவர்கள் காலமானார்

அன்னரரின் பூதவுடல் புஞ்சிபொரளை லங்கா மலர்ச்சாலயில்
(16-01-2026) வெள்ளிக்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு,
அன்னாரின் இறுதிக்கிரியை ஞாயிற்றுக்கிழமை 18-01-2026
அன்று பகல் 12.30 மணிக்கு புஞ்சிபொரளை லங்கா மலர்சாலையில்
ஆரம்பித்து மாலை 3.30 மணிக்கு முன்னதாக நல்லடக்கம் செய்யப்படும்.
என்பதை ஆழ்ந்த துயரத்துடன் அறியத்தருகின்றோம்

தகவல் - மனைவி ஜஸ்மின் 071- 2215289, 074 - 1959992

பிள்ளைகள் : யாத்திரா, சிவிஷ், சகோதரர்கள் : தர்ஷினி, ஜெகன்சிங்
மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வாய்ச் சவடால் பேச்சு

“இலங்கையில் மீண்டும் இன வாதத்தை துண்டுவதற்கு சிலர் முற் படுகின்றனர். அதற்கு இடமளிக்கமாட் டோம். இனவாதம் நிச்சயம் தோற கடிக்கப்படும்.”

- இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்து உறுதியளித்திருக்கின்றார்.

‘’இனவாதம் என்பது இந்நாட்டுக்கு அழிவையே தந்துள்ளது. இதன்மூலம் எவ்வித நன்மையும் கிட்டவில்லை. மக்கள் மத்தியில் துயரங்களே குவிந் தன. தற்போதும் அரசியலுக்காக இன வாதப் பிரச்சினையை தோற்றுவிப் பதற்கு சிலர் முற்படுகின்றனர். நாம் இனவாதத்துக்கு ஒருபோதும் இட மளிக்கமாட்டோம்.’’ - என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

நல்லது. நாட்டின் தலைவர்கள் இப்படி இனவாதத்திற்கு எதிராகப் பேசுவது முன்னரும் தாராளமாக இடம்பெற்றிருக்கின்றது. ஆனால் ஆட்சித் தலைவர்களின் இந்த உப தேசங்கள் பெரும்பாலும் சாத்தான் வேதம் ஓதுகின்ற விவகாரமாக முடிந்திருப்பதை இந்த நாட்டில் சிறுபான்மையினரான தமிழர்கள் நீண்ட காலமாகச் சந்தித்து வந்திருக் கிறார்கள்.

ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவ தற்கு இலகுவான மார்க்கமாக பேரின வாதத்தை கையில் எடுப்பதும், அதன் மூலம் அதிகாரத்தைப் பிடித்த பின்னர் இப்படி இன நல்லிணக்கம் பற்றி உபதேசம் செய்வதும் தென்னிலங்கை தலைமைகளின் வழமையான பரவ ணிப் பழக்கங்கள்தான்.

இந்த ஜனாதிபதியும் அவரின் ஜே.வி.பி. கட்சியும் கடந்த காலத்தில் கிளப்பாத இனவாதமா? எல்லோருக் கும் தெரிந்த விடயம் அது.

முன்னர் இழந்த ஆட்சி அதிகாரத்தை மீண்டும் பிடிப்பதற்காகப் பேரின வாதத்தின் உச்சியில் நின்று சந்நதம் கொண்டு ஆடியது ராஜபக்ஷ குடும் பம். அந்தக் குடும்ப ஆட்சி பொருளா தார ரீதியில் நாட்டை மிக மோசமாக பின்னடைவுக்குள் தள்ளி, நெருக்கடி உச்சத்தைத் தொட்ட சமயத்தில் அதி காரத்தை விட்டு ஓடித்தப்ப வேண்டிய இக்கட்டு அதற்கு ஏற்பட்டது. அந்தப் பின்புலத்தில், அந்தப் பின்னடைவை பயன்படுத்தி இப்போது அதிகாரத்தை கைப்பற்றிய ஜே.வி.பி. அதன் காரண மாக பேரினவாதத்தை அடியோடு கைவிட்டமை போல வெளிப் பகட் டுக்குப் பாசாங்கு பண்ணுகின்றது என்றுதான் தமிழ் மக்கள் கருதுகி றார்கள்.

இனவாதத்தை கைவிடுவதானால், இனவாதத்தால் பாதிக்கப்பட்ட சிறு பான்மையினருக்கு நீதி செய்து, நியா யத்தை நிலை நாட்ட முன்வர வேண் டும். ஆனால் அந்தத் திசையை நோக்கி அநுரகுமார திஸநாயக்கவின் அரசு நகர்வதாகவே இல்லை. தமிழர்களின் நீதி, நியாயமான, வரலாற்று உரித்துக் கொண்ட அபிலாசைகளை நிறைவு செய்வதன் மூலம் மட்டுமே தாங்கள் இழைத்த பேரினவாத குற்றங்களுக்கு ஜே.வி.பி. உட்பட தென்னிலங்கை பெருங்கட்சிகள் நிவாரணம் - பரிகாரம் - பிராயச்சித்தம் - தேட முடியும். ஆனால் அதைச் செய்வதற்கான முது கெலும்பு - துணிச்சல் - இந்த ஜனாதி பதிக்கும் இல்லை என்பதுதான் உண் மையாகும்.

இனவாதத்துக்கு இடமளியோம் என்று வெறும் பசப்பு வார்த்தைகளைப் பேசுவதில் அர்த்தமில்லை. அதற்கு அப்பால் சிறுபான்மையினருக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை களைந்து, நீதியை நிலை நாட்டுவது மட்டுமே இனவாதத்துக்கு எதிரான நியாயமான செயற்பாடாக இருக்க முடியும். அதைச் செய்யாமல் வெறும் வாய்ச் சவடால் உபதேசம் செய்வதில் அர்த்த மில்லை.




# யாழ்ப்பாணம் மாநகர சபையில் நேற்று தைப்பொங்கல் நிகழ்வு

யாழ்ப்பாணம் மாநகரசபையின் தைப்பொங்கல் நிகழ்வு மாநகரசபையின் ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் மாநகர முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராசா தலைமையில் நேற்று யாழ். மாநகரசபையில் நடைபெற்றது.

பொங்கல் நிகழ்வை மத வழிபாடுகளுடன் அரிசியிட்டு முதல்வர் ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களால் அரிசியிடப்பட்டது. தொடர்ந்து உரிய முறைப்படியான சமய நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் மாநகர சபையின் உறுப்பினர்கள், ஆணையாளர், செயலாளர், பிரதம பொறியியலாளர், கணக்காளர், உதவி ஆணையாளர், நிர்வாக உத்தியோகத்தர், கிளைகளின் பொறுப்பதிகாரிகள், மாநகர உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



# வேலையின்மை விகிதம் இலங்கையில் அதிகரிப்பு

2025ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் நாட்டின் வேலையின்மை விகிதம் 4.3 சதவீதமாக பதிவாகியுள்ளது.

கடந்த 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 4.2 சதவீதமாக பதிவாகியிருந்ததாக குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது கடந்த 2024 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் 3.8 சதவீதமாக இருந்ததை விட 0.5 சதவீதம் அதிகம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டில் பெண்களின் வேலையின்மை ஆண்கள் வேலையின்மையை விட இரண்டு மடங்கு அதிகம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய, பெண்களின் வேலையின்மை விகிதம் 19.2 வீதமாக காணப்பட்டதாகவும் குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.





# மருதமுனையில் டெங்கு அபாயம் சுற்றுச்சூழல் சோதனை தீவிரம்!

## சில வீடுகளுக்கு சிவப்பு எச்சரிக்கை

கல்முனை பிராந்தியத்தில் தற்போது நிலவும் மழையுடனான காலநிலையைத் தொடர்ந்து, கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட மருதமுனை பிரதேசத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. இந்த நிலைமையை கட்டுப்படுத்தும் நோக்கில், மருதமுனை பிரதேசத்தில் விசேட டெங்கு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீனின் விசேட அறிவுறுத்தலின் பேரில், பிராந்திய தொற்று நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்தியர் டாக்டர் எம்.ஐ.றிஸ்னீன் முத்தின் வழிகாட்டலின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கல்முனை தெற்கு பதில் சுகாதார வைத்திய அதிகாரி சமூக நல விசேட வைத்தியர் டாக்டர் எம்.எம்.பாயிஸ் தலைமையில் இடம்பெற்ற டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையில், பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம்.லபீர் உள்ளிட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் நுளம்பு கட்டுப்பாட்டுக் கள உதவியாளர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

மருதமுனை பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் குழுக்களாகப் பிரிந்து சென்ற அதிகாரிகள், வெற்றுக்காணிகள், வீடு உள்ளிட்ட சுற்றுச் சூழல் மற்றும் கட்டட இடிபாடுகள் ஆகியவற்றை தீவிரமாகச் சோதனை செய்தனர். இதன்போது, நுளம்பு பெருகக் கூடிய வகையில் நீர் தேங்கி நின்ற கொள்கலன்கள், பயன்படுத்தப்படாத ரயர்கள் உள்ளிட்ட பொருள்கள் உடனடியாக அகற்றப்பட்டன.

சுற்றுச் சூழலை மிகவும் அசுத்தமாகவும், டெங்கு நுளம்புகள் பெருகும் வகையிலும் காணப்பட்டிருந்த சூழலைக் கொண்டிருந்த 12 பேருக்கு சிவப்பு எச்சரிக்கை வழங்கப்பட்டதுடன் மூன்று பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

டெங்கு நோயின் ஆபத்துக்கள், அதன் அறிகுறிகள் மற்றும் நோய்த் தாக்கத்திலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்து இதன்போது பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

# கட்டாரில் கின்னஸ் சாதனை படைத்த இலங்கையர் சுக்கூர் முஹம்மது பர்ஸாத்!









(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கட்டாரில் பொதுப்பணித்துறை அமைச்சு மற்றும் பொது சுகாதார அமைச்சும் இணைந்து முன்னெடுத்த, உலகின் மிகப்பெரிய 'பாசிவ்' ஆய்வகத் (World's Largest Passive Laboratory) திட்டத்தில் இலங்கையைச் சேர்ந்த சிரேஷ்ட கட்டுமானத்துறை நிபுணர் அப்துல் சுக்கூர் முஹம்மது பர்ஸாத் கின்னஸ் உலக சாதனை சான்றிதழைப் பெற்றுள்ளார்.

கட்டாரில் நிர்மாணிக்கப்பட்ட இந்த ஆய்வகம், பிராந்தியத்தின் சுகாதார மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டில் ஒரு முக்கிய மைல்கல்லாகும். புதுமை மற்றும் நிலைபேறான தன்மைக்குக் கட்டார் வழங்கும் முன்னுரிமையை இந்தத் திட்டம் உலகுக்கு பறைசாற்றியுள்ளது. இந்த பிரம்மாண்டமான திட்டத்தின் வர்த்தக ஆரம்பம் மற்றும் ஒப்பந்தங்களை நிறைவு செய்யும் (Contract Closure) பணிகளில் பர்ஸாத் சுக்கூர் ஆற்றிய காத்திரமான பங்களிப்பை அங்கீகரித்து இந்தச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

பொதுப்பணித்துறை அதிகார சபையின் கட்டடத் துறை பொறியியலாளர் ஜாரல்லா முகமது அல்-மரியிடம் இருந்து பர்ஸாத் சுக்கூர் இந்தச் சான்றிதழைப் பெற்றுக் கொண்டார்.

அம்பாறை மாவட்டத்தில் மருதமுனையை பிறப்பிடமாகக் கொண்ட இவர், முன்னாள் கூட்டுறவு முகாமையாளர் அப்துல் சுக்கூரின் புதல்வர் ஆவார். சிவில் பொறியியலாளர் மற்றும் அளவையாளர் எனப் பன்முகத் திறமை கொண்டவர்.கட்டுமானத் திட்ட மேலாண்மையில் முதுகலைப் பட்டமும் பெற்றுள்ளார்.

இவர் மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் பழைய மாணவராவார்.




# மட்டக்களப்பில் மது அருந்தியவர்களிடம் பணம் கேட்ட மதுபானசாலை முகாமையாளர் மீது தாக்குதல் சம்பவம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு புதுரார் பிரதேசத்திலுள்ள மதுபானசாலையில் மது அருந்திய குழுவிடம் பணம் கேட்ட அதன் முகாமையாளரை மதுபான போத்தலிலால் தலையில் தாக்கிய சம்பவம் தொடர்பாக ஒருவரை நேற்று வெள்ளிக்கிழமை தாங்கள் கைது செய்துள்ளனர் என்றும் இருவர் தலைமறைவாகியுள்ளனர் எனவும் மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த மதுபானசாலையில் கடந்த 9 ஆம் திகதி இரவு மது அருந்துவதற்காக அந்த பகுதியைச் சேர்ந்த 4 பேர் கொண்ட குழுவினர் சென்று மதுபானம் அருந்தியுள்ளனர்.

அருந்திய மதுபானத்துக்கான பணத்தை அந்த முகாமையாளர் கேட்ட போது அவரை அங்குள்ள முகாமையாளரின் அறைக்குள் சென்று அவர் மீது மதுபானப் போத்தலால் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் அவர் படுகாயமடைந்தநிலையில்வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். தாக்குதல் நடத்தியவர்கள் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளனர்.

இதனை தொடர்ந்து தாக்குதல் நடத்தியவர்களை பொலிஸார் தேடி வந்தநிலையில்தலைமறைவாகியிருந்த ஒருவரை நேற்று வெள்ளிக்கிழமை பொலிஸார் கைது செய்தனர். தலைமறைவாகியுள்ள மற்றைய இருவரைத் தாங்கள் தேடி வருகின்றனர் எனல் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# மட்டக்களப்பில் நாலரை வயதுச் சிறுமி மீது பாலியல் சேட்டை புரிந்த தந்தையார் கைது

## பதினான்கு நாள்கள் விளக்கமறியல் வைக்க உத்தரவு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 வயது 8 மாதம் கொண்ட சிறுமி மீது பாலியல் சேட்டை செய்ய முயற்சித்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சிறுமியின் தந்தையை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு பதில் நீதுவான் நேற்றய் உத்தரவிட்டார்.

வெளி மாவட்டத்தைச் சேர்ந்த இந்த நபர் தொழில் நிமித்தமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு பிரதேசத்தில் வாடகைக்கு வீடு எடுத்து குடும்பத்துடன் தங்கியிருந்து வருகிறார்.



அந்த நபர் அவரது 4 வயது 8 மாதம் கொண்ட சிறுமி மீது பாலியல் சேட்டை விடுத்துள்ளார் எனொ பாதிக்கப்பட்ட சிறுமி தாயாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து தாயார் பொலிஸ் நிலையம் ஒன்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முறைப்பாடு செய்ததையடுத்து சிறுமியின் தந்தையாரைப் பொலிஸார் கைது செய்ததனர். சிறுமியை வைத்தியசாலையில் சேர்த்தனர்.

கைது செய்யப்பட்டவரை இன்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிவான் முன்னிலையில் பொலிஸார் ஆஜர் படுத்தினர். அவரை 29 ஆம் திகதி வரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸ் நிலைய பெண்கள் சிறுவர் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.



# புல்லாவெளி செபஸ்தியாருக்கு நேற்றுக் கொடியேற்றம்

(மரியசீலன் திலைக்ஸ்)

உலகப் புகழ் பெற்ற யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலயக் கொடியேற்ற நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

நேற்றுய் மாலை 4:30 மணியளவில் கட்டைக்காடு பங்குத்தந்தை வசந்தன் அடிகளார் தலைமையில் கொடியேற்ற நிகழ்வு ஆரம்பமானது

வருகின்ற 19 ஆம் திகதி நற்கருணை பெருவிழாவும் வருகின்ற 20 ஆம் திகதி பெருவிழா திருப்பலியும் செபஸ்தியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட விருக்கின்றன.

நேற்றைய கொடியேற்ற நிகழ்வில் அதிக எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர். புல்லாவெளி புனித செபஸ் தியாரின் பெருவிழாவை கொண்டாட நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பக்தர்கள் வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.





# ஜனாதிபதி மீது நம்பிக்கை உள்ளது சத்தியலிங்கம் எம்.பி. கூறுகின்றார்

## வடக்கு வருகை தொடர்பில் அதிகார பூர்வ அழைப்பு வரவில்லையாம்

(கி.வசந்தன்)

ஜனாதிபதி மீது நம்பிக்கை இருக்கிறது. ஜனாதிபதியின் வடக்கு வருகை தொடர்பில் அதிகார பூர்வ அழைப்பு எதுவும் எமக்கு விடுக்கப்படவில்லை என தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்திய லிங்கம் தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் வடமாகாண விஜயம் குறித்து கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

கடந்த காலங்களில் வடக்குக்கு வருகை தந்த ஜனாதிபதிகள் தமிழ் மக்களின் சொத்துக்களை அழித்தவர்களாகவும், அவர்களை காணாமல் ஆக்கியவர்களாகவும், இடம்பெயரக் காரணமானவர்களாகவும் இருந்தமையால் மக்கள் மத்தியில் வெறுப்புக் காணப்பட்டது.

ஆனால், இந்த தலைமுறை ஜனாதிபதிகளின் கொடூரமான முகத்தை பார்க்கவில்லை. ஆனால், தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடம் அத்தகைய கொடூரமான முகம் இருப்பதாக நான் கூறவரவில்லை. இளம், துடிப்பான, நல்ல விடயங்களை பேசுகின்ற ஒரு ஜனாதிபதியாக அவர் இருக்கிறார்.

எங்களுக்கும் அவர் மீது நம்பிக்கை இருக்கிறது. நாட்டை முன்னேற்றுவார் என்ற நம்பிக்கை உள்ளது. அந்த நம்பிக்கை நடைமுறைக்கு வருமா, இல்லையா என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

ஜனாதிபதியின் வடக்கு வருகை குறித்து பத்திரிகைகள் வாயிலாகவே நாம் அறிந்தோம். அதிகார பூர்வமான அழைப்புகள் எதுவும் விடுக்கப்படவில்லை. மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் கூட, ஜனாதிபதியோ அல்லது அமைச்சர்களோ வடக்குக்கு வரும் போது மக்கள் பிரதிநிதிகளை அழைத்து கலந்துரையாடும் பண்பு இருந்தது. ஆனால் தற்போதைய அரசு தனது கட்சி உறுப்பினர்களுடன் மட்டுமே ஆலோசனைகளை மேற்கொள்கின்றது.

ஜனாதிபதி மக்களைச் சந்திப்பது வரவேற்கத்தக்கது. போரால் பாதிக்கப்பட்ட மக்களின் அவலங்களை அவர் அறிந்து கொள்ளவேண்டும். இந்த நாட்டை ஒரு முன்னேற்றகரமான திசைக்குக் கொண்டு செல்ல வேண்டுமானால், தமிழ் மக்களும் ஏனைய இனங்களைப் போல சம அந்தஸ்துடன் வாழ்வதற்கான சூழலை எவராவது ஏற்படுத்தினால் அத்தகைய முயற்சிக்கு நாம் எப்போதும் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருக்கிறோம். அவரது வரவு நல்வரவாக இருக்கட்டும். – என அவர் மேலும் தெரிவித்தார்.





# மலையகத்தில் நேற்றுப் பட்டிப் பொங்கல்

(பொகவந்தலாவ நிருபர்: எஸ் சதீஸ்)

தைப்பொங்கலின் தொடராக மலையகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை பட்டிப் பொங்கல் இடம் பெற்றது.

இதன் போது மலையகப் பெருந்தோட்ட பகுதிகளில் கால்நடை வளர்ப்பாளர்கள் சுப நேரத்தில் ஆடு மற்றும் மாடுகளை நீராட செய்து, மாடுகளின் கொம்புகளுக்கு வர்ணங்கள் பூசி, பட்டிகளை சிறப்பித்தமையை அவதானிக்க முடிந்தது.

அதன் பிறகு சுபநேரம் மாலை 4.30மணியளில் மாடுகளுக்கு பொங்கல் பொங்கி ஊட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# வவுனியாவில் தமிழரசின் கலாசாரப் பொங்கல் விழா நேற்றுக் காலை சத்தியலிங்கம் எம்.பி. தலைமையில்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் கலாசாரப் பொங்கல் விழா நேற்றுக் காலை வவுனியா குருமன் காட்டில் அமைந்துள்ள கட்சியின் மாவட்ட அலுவலகமான தாயகத்தில் இடம்பெற்றது.

கட்சியின் மாவட்டக் கிளைத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மருத்துவர் ப.சத்தியலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமிழர் பாரம்பரிய கலை கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையில் பொங்கல் விழா இடம்பெற்றன. பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து கலாசார நிகழ்வுகளும், அதிதிகள் வாழ்த்துரையும் இடம்பெற்றன. மேலும் விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

நிகழ்வில் பங்குபற்றிய அனைத்து சிறுவர்களுக்கும் பரிசிப்பொருள்களும், விளையாட்டு நிகழ்வுகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பணப்பரிசில்களும் நாடாளுமன்ற உறுப்பினரால் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், உப தவிசாளர்கள், உறுப்பினர்கள், கட்சி உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.













# இரத்தினபுரி பொது நூலகத்தின் நுழைவாயிலில் பெரும்பான்மையினரின் தைப்பொங்கல் கோலம்

**(ஸ்ரீநிவாசகம் இரவீந்திரன்)**

இரத்தினபுரி பொது நூலகத்தின் வாயிலில் இன நல்லுறவினை மேம்படுத்தும் வகையில் தமிழர் திருநாளாம் தைப்பொங்கலை வரவேற்கும் வகையில் அழகிய வர்ண கோலமிட்டு கும்பமும் வைக்கப்பட்டருக்கின்றது.

பொது நூலகத்தின் வாசிப்போர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் பெரும்பான்மையின மாணவர்களால் இக்கோலம் போடப்பட்டது குறிப்பிடத்தக்கது.











# இரத்தினபுரி சிங்கர் காட்சியறையில் தீ!

**(ஸ்ரீநிவாசகம் இரவீந்திரன்)**

இரத்தினபுரி பண்டாரநாயக்க வீதியிலுள்ள சிங்கர் ஹோம் காட்சியறை திடீரெனத் தீப்பிடித்து எரிந்ததனால் அக்காட்சியறை பலத்த சேதத்திற் குள்ளானதாக இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுவெள்ளிக்கிழமை இடம் பெற்ற இச்சம்பவத்தில் தொலைக் காட்சிப் பெட்டிகள், குளிர் சாதனப் பெட்டிகள் உள்ளிட்ட பெறுமதி மிக்க பொருடள்கள் சேதமடைந்த போதிலும் உயிர் சேதங்கள் எதுவும் எற்படவில்லை.

இரத்தினபுரி நகரசபைக்குச் சொந்த தீயணைப்பு படையினர், பொலிஸார் மற்றும் பிரதேச மக்கள் ஒன்றிணைந்து பலத்த பிரயத்தனங்களை மெற்கொண்டே தீயைக் கட்டுப்பாட்டுக்குட் கொண்டு வந்தனர். இதனால் அருகிலுள்ள ஏனைய வர்த்தக நிறுவனங்கள் பாதுக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த தீவிபத்துக்கான காரணம் இதுவரைக் கண்டறியப்படவில்லை. இது குறித்து இரத்தினபுரி பொலிஸார் மேலதிக விசாரணை நடத்தி வருகின்றனர்.





# ஜிந்துபிட்டியில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த மூவரில் ஒருவர் மரணம்



ஜிந்துபிட்டியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸ் தெரிவித்துள்ளது.

முன்னதாக ஜிந்துபிட்டி பகுதியில் நேற்று முன்தினம் இரவு நடந்த துப்பாக்கிச் சூட்டில் மூவர் காயமடைந்து கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர் வ்ன பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளதுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த மற்றைய இருவரும் சிறுவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

# புயலால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கல்வி உதவி கொடுப்பனவு வழங்கல் நிறைவு



டித்வா புயலால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் கல்வி உதவிக் கொடுப்பனவு முழுமையாக வழங்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

3000 மாணவர்களுக்கு 15,000 ரூபா வீதம் கல்வி உதவிக் கொடுப்பனவு வழங்கப்பட்டதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

தற்போது கிடைக்கப்பெற்ற மேன்முறையீடுகளை மீளாய்வு செய்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் வீடுகளை துப்புரவுபடுத்துதல் உள்ளிட்ட செயற்பாடுகளுக்கான 25,000 ரூபா கொடுப்பனவு தற்போது முழுமையாக வழங்கப்பட்டுள்ளதுடன், மேன்முறையீடுகள் ஆராயப்பட்டு வருவதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் ப்ரபாத் சந்திர கீர்த்தி தெரிவித்தார்.

வீடுகளை இழந்து வாடகை வீடுகளில் வசிப்பவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த வாடகை கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

வீடுகளை இழந்தவர்களுக்கு நிலையான வீடுகளை நிர்மாணிப்பதற்கு பொருத்தமான காணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவற்றுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் பரிந்துரையைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

# சாரதி அனுமதிப்பத்திரம் இனி சீராக கிடைக்கும்




கடந்த 2025 ஆம் ஆண்டு நிலவிய பாரிய தாமதங்களுக்குப் பிறகு, தற்போது சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிட்டு விநியோகிக்கும் பணிகள் சீரடைந்துள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் சுமார் 490,000 சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பங்கள் தேங்கிக் கிடந்ததால், அட்டைகளை அச்சிடுவதில் பெரும் நெருக்கடி ஏற்பட்டதாக ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் வெளிநாடு செல்பவர்கள் மற்றும் உத்தியோகபூர்வ தேவைகளுக்காக அவசரமாக சாரதி அனுமதிப்பத்திரம் தேவைப்பட்டவர்களுக்கு மட்டுமே ஒருநாள் சேவையின் கீழ் முன்னுரிமை வழங்கப்பட்டது.

தற்போது சுமார் 255,000 சாரதி அனுமதிப்பத்திர அட்டைகள் அச்சிடப்பட்டு, அவற்றை விநியோகிப்பதற்காக இலங்கை தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

2026 ஆம் ஆண்டில் இந்த நடைமுறைகள் அனைத்தும் சீரமைக்கப்பட்டுள்ளதாகவும், விண்ணப்பதாரர்கள் இனி எவ்வித தாமதமுமின்றித் தமது அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் திணைக்களம் உறுதியளித்துள்ளது.



# பல்கலைக்கழக மாணவர்களும் பிரதேச இளைஞர்களும் மோதல்

## மூவர் காயம்

பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு அருகில் உள்ள உடபேராதனைப் பகுதியில் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பிரதேச இளைஞர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் மூன்று மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் கண்டி மற்றும் பேராதனை மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் பேராதனைப் பல்கலைக் கழக மகா மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவர் ரஜித மலலசேகரவும் அடங்குகிறார் என தெரிவித்துள்ளனர்.

மாணவர் தாய் சங்கத்தின் முன்னாள் தலைவர் மற்றும் கால்நடை மருத்துவ பீட மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவர் உள்ளிட்ட எட்டு மாணவர்கள், உடபேராதனை பகுதியில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்துக்குச் சொந்தமான பண்ணைக்கு அருகிலுள்ள நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்ற போது, மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில், தாக்குதலை நடத்தியதாகக் கூறப்படும் நான்கு இளைஞர்களைசந்தேகத்தின்பேரில்கைதுசெய்துள்ளனர் என பேராதனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# டித்வா சூறாவளி அனர்த்தம் தொடர்பான அடிப்படை உரிமைகள் மனு விசாரணைக்கு

டித்வா சூறாவளி குறித்து முன்கூட்டியே எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தும், பாதிப்புகளைக் குறைக்கத் தவறியதன் மூலம் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகக் கூறி கண்டி மாவட்ட சட்டத்தரணி ஒருவரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை எதிர்வரும் ஜூலை 15 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

நேற்று பிரதம நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேன மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகியோரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு வந்தது.

இதன்போது, மனுவில் பெயரிடப்பட்டுள்ள அமைச்சரவை உறுப்பினர்கள் உள்ளிட்ட சில தரப்பினருக்கு இன்னும் நோட்டீஸ் கிடைக்கவில்லை என அரச சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

இதன்படி, அமைச்சரவை உறுப்பினர்கள், இலங்கை மகாவலி அதிகார சபை, அனர்த்த முகாமைத்துவ குழு ஆகியோருக்கு அறிவித்தல் அனுப்புமாறு மனுதாரர் தரப்புக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

மனுதாரர் தரப்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய, நவம்பர் 12 முதல் வளிமண்டலவியல் திணைக்களம் கனமழை குறித்து எதிர்வு கூறல்களை வழங்கியிருந்தது.

நவம்பர் 27 இரவு 11:10 மணியளவில் எவ்வித முன்னறிவிப்புமின்றி கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டன.



இதனால் வெளியேறிய பாரிய நீர் காரணமாக, அடுத்த நாள் அதிகாலை 3 மணியளவில் கம்பளை பிரதேசம் முழுமையாக நீரில் மூழ்கியது. இதனைத் தொடர்ந்து கெலிஓயா, பேராதனை மற்றும் கண்டி ஆகிய பகுதிகள் படிப்படியாக வெள்ளத்தில் மூழ்கின.

அதிகாரிகள் முன்கூட்டியே திட்டமிட்டிருந்தால் இந்த சேதங்களைத் தவிர்த்திருக்கலாம் என அவர் சுட்டிக்காட்டினார்.

கண்டி நீதிமன்ற வளாகத்திற்கு அருகில் தனது அலுவலகம் அமைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள சட்டத்தரணி கீர்த்தி பண்டார கிரிதென, வெள்ளம் காரணமாக தனது அலுவலகம் முழுமையாக சேதமடைந்துள்ளதாகவும், கணினிகளில் இருந்த முக்கிய தரவுகள் அழிந்ததால் தனது தொழிலுக்குப் பாரிய இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் மனுவில் தெரிவித்துள்ளார்.

கொத்மலை நீர்த்தேக்க நீரை விடுவிப்பதற்கு முன்னர் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தால் சேதங்களைக் குறைத்திருக்கலாம் என்றும், அதிகாரிகளின் இந்த கவனயீனமான செயலால் தனது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்குமாறும் மனுதாரர் உயர் நீதிமன்றத்தைக் கோரியுள்ளார்.

# ரவி - அர்ஜுன் அலோசியஸிற்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் பெர்பெச்சுவல் ட்ரெசரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் ஆகியோருக்கு எதிரான ஊழல் வழக்கை எதிர்வரும் பெப்ரவரி 06 ஆம் திகதிக்கு ஒத்திவைக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவினால் ரவி கருணாநாயக்க மற்றும் அர்ஜுன் அலோசியஸ் ஆகியோருக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மொஹமட் மிஹால் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரதி மன்றாடியார் நாயகம் ஜனக பண்டாரவின் வழிகாட்டலில் நேற்று சாட்சிப் பதிவுகள் இடம்பெற்றன.

நேற்றைய சாட்சிப் பதிவுகளைத் தொடர்ந்து, வழக்கின் மேலதிக சாட்சி விசாரணைகளை எதிர்வரும் பெப்ரவரி மாதம்06ஆம்திகதியன்று முன்னெடுக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# டித்வா புயலால் மலையகத்தில் 34 வீதமான காடுகள் அழிந்தன

## சுற்றாடல் அமைச்சு அதிர்ச்சித் தகவல்



அண்மையில் இலங்கையைத் தாக்கிய டிட்வா சூறாவளியைத் தொடர்ந்து ஏற்பட்ட கடும் மழை மற்றும் மண்சரிவு காரணமாக, நாட்டின் மத்திய மலைநாட்டு இயற்கை வனப்பகுதிகளில் 34 சதவீதம் சேதமடைந்துள்ளதாகச் சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

மத்திய மலைநாட்டின் தனித்துவமான இயற்கை வன சுற்றுச்சூழல் அமைப்புகள் மண்சரிவுகளால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

ஆரம்பக்கட்ட ஆய்வுகளின்படி, இப்பகுதியிலுள்ள 34 வீதமான காடுகள் அழிவடைந்துள்ளதாக சுற்றாடல் அமைச்சர் தம்மிக படபெந்திக குறிப்பிட்டுள்ளார்.

இந்த பாதிப்புகள் குறித்த ஆய்வுகளை மேற்கொள்வதற்காகச் சுற்றாடல் அமைச்சின் செயலாளரின் தலைமையில் நியமிக்கப்பட்ட விசேட குழு, தனது பூர்வாங்க அறிக்கையை அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ளது.

இந்த இயற்கை அனர்த்தத்தினால் நாட்டின் ஏழு பிரதான நதிப் படுக்கைகளின் சுற்றுச்சூழல் அமைப்புகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மத்திய மலைநாடு மட்டுமன்றி, இலங்கையின் கடலோரச் சூழல் மற்றும் களப்பு பகுதிகளும் இந்தச் சூறாவளியினால் பாரிய சேதங்களைச் சந்தித்துள்ளன.

# கர்ப்ப கால நீரிழிவு நோய்க்கு உள்ளாகும் தாய்மார்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



இலங்கையில் கர்ப்ப காலத்தில் நீரிழிவு நோய்க்கு உள்ளாகும் தாய்மார்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவரும், நீரிழிவு மற்றும் நாளமில்லாச் சுரப்பிகள் தொடர்பான விசேட மருத்துவருமான மருத்துவர் மணில்க சுமனதிலக்க தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கர்ப்பமடைவதற்கு முன்பே உடல் நிறை அதிகமாக இருத்தல் மற்றும் ஆரோக்கியமற்ற உணவுப் பழக்க வழக்கங்கள் இந்த நோய் ஏற்படுவதற்கு முக்கியமான காரணம் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கர்ப்ப காலத்தில் நீரிழிவு நோயால் பாதிக்கப்படும் தாய்மார்களுக்குப் பிறக்கும் குழந்தைகள், பிற்காலத்தில் பாரிய சுகாதாரச் சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடும் என அவர் எச்சரித்த அவர், இக்குழந்தைகள் வளரும்போது நீரிழிவு உள்ளிட்ட தொற்றாத நோய்களுக்கு உள்ளாகும் அபாயம் மிக அதிகமாகக் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், உடல் நிறை அதிகமுள்ள பெண்கள் கர்ப்பமடைவதற்கு முன்னரே தமது எடையைக் குறைக்க வேண்டும். அத்தோடு, ஆரோக்கியமான உணவு முறை மற்றும் முறையான உடற்பயிற்சி மூலம் எடையில் 7 முதல் 10 வீதம் வரை குறைப்பது நோய்த்தாக்கத்தைக் கணிசமாகக் குறைக்கும் எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

# 13 நாள்களில் 106.6 பில்லியன் ரூபா வருமானம் ஈட்டிய சுங்க திணைக்களம்




சுங்கத் திணைக்களம் 2026 ஆம் ஆண்டின் முதல் வாரங்களில் வலுவான வருமானப் பதிவைப் பெற்றுள்ளது. ஜனவரி மாதத்தின் முதல் 13 நாள்களில் மட்டும் 106.6 பில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. இது அந்த மாதத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட 160.2 பில்லியன் ரூபா இலக்கில் 66 சதவீதத்திற்கும் அதிகமானதாகும்.

கடந்த நவம்பர் மாதம் டித்வா சூறாவளி காரணமாக குறைந்தது நான்கு நாள்களுக்குச் செயற்பாடுகள் ஸ்தம்பித்தன. அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட இடையூறுகள் மற்றும் டிசம்பர் மாதத்தில் அதிகரித்த இறக்குமதி அளவுகளுக்கு மத்தியில், கடந்த மாதம் முதல் கொள்கலன் விடுவிப்புப் பணிகளைத் திணைக்களம் துரிதப்படுத்தியுள்ளது.

2025 ஆம் ஆண்டில், இலங்கைச் சுங்கத் திணைக்களம் 2,551 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டி சாதனை படைத்தது. இது திருத்தப்பட்ட வருடாந்த இலக்கான 2,241 பில்லியன் ரூபாயை விட அதிகமாகும்.

அத்துடன், அதற்கு முந்தைய ஆண்டின் 1,553 பில்லியன் ரூபா வருமானத்துடன் ஒப்பிடுகையில் இது 64.2 சதவீத வளர்ச்சியாகும்.

வாகன இறக்குமதியில் பாரிய வீழ்ச்சி ஏற்படும் என அதிகாரிகள் எதிர்பார்ப்பதால், 2026 ஆம் ஆண்டிற்கான சுங்க வருமான இலக்கு 2,207 பில்லியன் ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 13.5 சதவீதம் குறைவானதாகும் என சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# கேணல் கிட்டு உள்ளிட்ட பத்து மாவீரர்களின் 33 ஆம் ஆண்டு நினைவேந்தல் முல்லைத்தீவில்









(பா.சதீசன்)

கடந்த 1993 ஆம் ஆண்டு வங்கக் கடலில் வீரகாவியமான விடுதலைப் புலிகளின் முத்த தளபதிகளில் ஒருவரான கேணல் கிட்டு உள்ளிட்ட பத்து மாவீரர்களின் 33 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தின் இறுவேறு இடங்களில் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டன.

அந்தவகையில் முல்லைத்தீவு – தேராவில் மாவீரர் துயிலுமில்ல மண்டபத்திலும், மூங்கிலாறு வடக்கு மாதர்கிராம அபிவிருத்திச் சங்க வளாகத்திலும் இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

அகவணக்கம் செலுத்தப்பட்டு, மாவீரர்களின் திருவுருவப் படத்திற்கு சுடர் ஏற்றப்பட்டு, மலர்மாலை அணிவிக்கப்பட்டு, மலர்தூவி அஞ்சலி நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றன.

தேராவில் மாவீரர் துயிலுமில்லத்தில் கேணல் கிட்டு உள்ளிட்ட மாவீரர்களின் நினைவாக மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நினைவேந்தல் நிகழ்வுகளில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் பிரதேச சபையின் தபிசாளர் மற்றும் உறுப்பினர்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.

# பொத்துவில் பிரதேச சபையின் தைப்பொங்கல் விழா நேற்று!





(வி.ரி.சகாதேவராஜா)

பொத்துவில் பிரதேச சபையின் தைப்பொங்கல் பண்டிகை விழா நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பிரதேச சபையின் தவிசாளர் எம் .ஐ. எம். முஸரப் தலைமையில் இந்தப் தைப்பொங்கல் விழா சபையில் நடைபெற்றது.

20 உறுப்பினர்களைக் கொண்ட பொத்துவில் பிரதேச சபையில் 04 உறுப்பினர்களே தமிழ் உறுப்பினர்களாவர்.

தமிழ் கலாச்சார முறைப்படி இத் தைப்பொங்கல் விழாவில் தமிழ், முஸ்லிம் உறுப்பினர்கள், மத தலைவர்கள், பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.



# மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்க விரைந்து நடவடிக்கை எடுக்குக!

## வெருகல் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் குகதாசன் எம்.பி. தெரிவிப்பு





(ஹஸ்பர் ஏ.எச்.)

மக்கள் பிரச்சினைகளை தீர்க்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் திணைக்களங்களுக்கு இடையிலான தொடர்புகளை ஒவ்வொரு அரச திணைக்களமும் கொண்டிருக்க வேண்டும் எனவும் இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

வெருகல் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று வெருகல் பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டபோதே இவ்வாறு தெரிவித்தார்.

நேரகாலத்தோடு அதிகாரிகள் கூட்டங்களுக்கு சமூகமளிக்க வேண்டும். மக்களுடைய பிரச்சினைகளை வீட்டுப் பிரச்சினையாக பார்த்து தீர்வு வழங்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ. அனஸின் நெறிப்படுத்தலில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு இணைத் தலைவரும் பிரதியமைச்சருமான அருண் ஹேமசந்திர தலைமையில் குறித்த கூட்டம் இடம்பெற்றது.

இதில் கடந்த கால அபிவிருத்திப் பணிகளின் மீளாய்வு மற்றும் எதிர்காலப் பிரதேச அபிவிருத்தி தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

அனர்த்த கால மதிப்பீடு மற்றும் அபிவிருத்தி பணிகள் உட்பட்ட மக்களின் குறைபாடுகள் தொடர்பிலும் மேலும் பேசப்பட்டன.

இதில் வெருகல் பிரதேச சபை தவிசாளர் மற்றும் திணைக்கள தலைவர்கள், அரச உயரதிகாரிகள், முப்படையினர் என பலரும் கலந்து கொண்டனர்.

# முல்லைத்தீவில் பல பகுதிகளிலும் நடைபெற்ற பட்டிப்பொங்கல் விழா!



(பா.சதீசன்)

பட்டிப்பொங்கல் நிகழ்வு நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நடைபெற்றது.

இந்த விழாவானது பாரம்பரியமாக நடைபெற்றுவருகின்றது. முதலில் மாடுகள் கட்டும் தொழுவத்தைச் சுத்தம் செய்து கொள்வார்கள். கால்நடைகளை குளிப்பாட்டி சுத்தம் செய்வார்கள். மாடுகளின் கொம்புகள் சீவப்பட்டு பளபளக்கும் வகையில் வண்ணம் பூசி, கூரான கொம்பில் குஞ்சம் அல்லது சலங்கை கட்டி விடுவார்கள். கழுத்துக்கு தோலிலான வார் பட்டையில் சலங்கை கட்டி அழகு படுத்துவார்கள். திருநீறு பூசி குங்குமப் பொட்டிட்டும் புதிய மூக்கணாங் கயிறு, தாம்புக் கயிறு அணிவித்தும் தயார் செய்வார்கள். பின்னர் பொங்குவார்கள்.

இவ்வாறு முல்லைத்தீவிலும் காளை மாடுகளைக் குளிப்பாட்டி சுத்தம் செய்து பொங்கப்பட்டது. மாடுகள் சில அலங்கரிக்கப்பட்டும் இருந்தன.

# மகாராஷ்டிர உள்ளாட்சித் தேர்தலில் பா.ஜ.க. கூட்டணி அமோக வெற்றி



**முன்னிலை நிலவரம்**

| | |
|---|---|
| மொத்த வார்டுகள் | 2,869 |
| பாஜக | 1,421 |
| சிவசேனா (ஷிண்டே) | 365 |
| காங்கிரஸ் | 317 |
| சிவசேனா (உத்தவ்) | 162 |
| தே.வா.காங்கிரஸ் (அஜித் பவார்) | 159 |
| ஏஐஎம்ஐஎம் | 94 |
| தே.வா.காங்கிரஸ் (சரத் பவார்) | 29 |
| மகாராஷ்டிர நவ நிர்மாண் சேனா | 15 |

மகாராஷ்டிர உள்ளாட்சித் தேர்தலில் பா.ஜ.க. கூட்டணி அமோக வெற்றி பெற்றுள்ளது. மொத்தம் உள்ள 29 மாநகராட்சிகளில் மும்பை, புனே, நாக்பூர் உள்ளிட்ட 25 மாநகராட்சிகளை பா.ஜ.க. கைப்பற்றுகிறது.

மகாராஷ்டிராவில் முதல்கட்டமாக நகராட்சிகள், பேரூராட்சிகள் என 288 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடந்த டிசம்பர் 2 ஆம் திகதி தேர்தல் நடத்தப்பட்டது. இதில் பா.ஜ.க. தலைமையிலான மகாயுதி கூட்டணி 207 நகராட்சிகளைக் கைப்பற்றி அபார வெற்றி பெற்றது.

இதன் தொடர்ச்சியாக, மும்பை உள்ளிட்ட 29 மாநகராட்சிகளுக்கு கடந்த 15 ஆம் திகதி தேர்தல் நடைபெற்றது. இதில் மாநகராட்சிகளுக்கு ஏற்ப கூட்டணிகள் மாறின. இந்நிலையில், முடிவுகள் நேற்று அறிவிக்கப்பட்டன. மும்பை, புனே, நாக்பூர் மும்பை மாநகராட்சியில் மொத்தம் 227 வார்டுகள் உள்ளன. இதில் பா.ஜ.க. 87 வார்டுகளில் வெற்றி பெற்றது. அதன் கூட்டணி கட்சியான ஏக்நாத் ஷிண்டேவின் சிவசேனா 27 வார்டுகளில் வெற்றி பெற்றது. இந்த மாநகராட்சியில் பெரும்பான்மையை நிரூபிக்க 114 கவுன்சிலர்களின் ஆதரவு தேவை.

ஆளும் பா.ஜ.க. கூட்டணி அறுதிப் பெரும்பான்மையை எட்டி மும்பை மாநகராட்சியை கைப்பற்றி உள்ளது. உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனா 62 வார்டுகளிலும், அதன் கூட்டணி கட்சியான ராஜ் தாக்கரேவின் மகாராஷ்டிர நவ நிர்மாண் சேனா 9 வார்டுகளிலும் வெற்றி பெற்றுள்ளன. சுமார் 30 ஆண்டுகளாக தாக்கரே குடும்பத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த மும்பை மாநகராட்சியில் முதல்முறையாக பா.ஜ.க. தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. காங்கிரஸ் மற்றும் கூட்டணி கட்சிகளுக்கு 15 வார்டுகள் கிடைத்தன.

மும்பையின் தாராவி பகுதியில் தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கின்றனர். இங்கு உள்ள 7 வார்டுகளில் 4 வார்டுகளில் உத்தவ் தாக்கரேவின் சிவசேனா, 2 வார்டுகளில் காங்கிரஸ், ஒரு வார்டில் ஏக்நாத் ஷிண்டேவின் சிவசேனா வெற்றி பெற்றுள்ளது. புனே மாநகராட்சியில் 165 வார்டுகள் உள்ளன.

இதில் பா.ஜ.க. 90 வார்டுகளில் வெற்றி பெற்று புனே மாநகராட்சியை கைப்பற்றி உள்ளது. நாக்பூர் மாநகராட்சியின் 151 வார்டுகளில் பா.ஜ.க. 104 வார்டுகளை கைப்பற்றி அபார வெற்றி பெற்றுள்ளது. தானே மாநகராட்சி தேர்தலில் மொத்தம் உள்ள 131 தொகுதிகளில் பா.ஜ.க, ஷிண்டே அணி கூட்டணி 62 தொகுதிகளில் வெற்றி பெற்றது. காங்கிரஸுக்கு ஒரு வார்டுகூட கிடைக்கவில்லை.

இதுமட்டுமின்றி, சத்ரபதி சாம்பாஜி நகர், நாசிக், நவி மும்பை, கல்யாண் – டொம்பிவிலி உள்ளிட்ட மாநகராட்சிகளிலும் பா.ஜ.க. அபார வெற்றி பெற்றுள்ளது. வசாய் – விரார் மாநகராட்சியின் 115 வார்டுகளில் பகுஜன் விகாஸ் அகாடி கட்சி 71 இடங்களை பெற்று மாநகராட்சியை கைப்பற்றியுள்ளது. பர்பானி மாநகராட்சியின் 65 வார்டுகளில் உத்தவ் தாக்கரே, ராஜ்தாக்கரே கூட்டணி 36 வார்டுகளில் வெற்றி பெற்று அந்த மாநகராட்சியை கைப்பற்றி உள்ளது.

# பாலமேடு வாடிவாசலை அதிரவைத்த காளைகள்: தீரத்துடன் அடக்கிய மாடுபிடி வீரர்களுக்கு பரிசு






பாலமேட்டில் நேற்று நடந்த ஜல்லிக்கட்டில் ஆக்ரோஷமாக களமாடிய காளைகள், அவற்றை அடக்கிய மாடுபிடி வீரர்களின் தீரத்தைக் கண்டு பார்வையாளர்கள் மெய்சிலிர்த்தனர்.

மதுரை பாலமேட்டில் நேற்று நடைபெற்ற ஜல்லிக்கட்டுப்போட்டியில் தென் தமிழகம் முழுவதுமிருந்து கொண்டுவரப்பட்ட 1,000 காளைகள் களமிறக்கப்பட்டன. 600 மாடுபிடி வீரர்கள் பங்கேற்றனர். வழக்கமாக மணிக்குள் தொடங்கும் போட்டி சற்று தாமதமாகத் தொடங்கியது.

அமைச்சர் பி.மூர்த்தி முன்னிலையில், துணை முதல்வர் உதயநிதி கொடியசைத்து போட்டியைத் தொடங்கி வைத்தார். பின்னர், அவர் ஒரு மணி நேரம் அரங்கில் அமர்ந்து, ஆட்சியர் பிரவீன்குமார், நடிகர் சூரி, ஜல்லிக்கட்டுப் பேரவைத் தலைவர் ராஜசேகர் ஆகியோருடன் போட்டியை ரசித்தார். மேலும், சிறப்பாக காளைகளை அடக்கிய வீரர்கள், சிக்காமல் சென்ற காளைகளின் உரிமையாளர்களுக்கு தங்க மோதிரங்களை பரிசாக வழங்கினார்.

ஒவ்வொரு சுற்றிலும் தலா 100 காளைகள் அவிழ்க்கப்பட்டன. சுற்றுவாரியாக அதிக காளைகளை அடக்கிய வீரர்கள் அடுத்தடுத்த சுற்றுக்குத் தேர்வாகினர். பார்வையாளர்கள் ஜல்லிக்கட்டை கண்டு ரசிக்க, வாடிவாசலில் இருந்து ஒரு கி.மீ. தொலைவுக்கு இருபுறங்களிலும் கேலரிகள் அமைக்கப்பட்டிருந்தன.

உள்ளூர் பார்வையாளர்கள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் அதிகாரிகள், விஐபிகளுக்கு தனித்தனியாக அமைக்கப்பட்ட கேலரியில் அமர்ந்து ஜல்லிக்கட்டைப் பார்வையிட்டனர். காளைகளை அடக்கிய வீரர்களுக்கும், பிடிபடாத காளைகளுக்கும் ஒவ்வொரு சுற்றிலும் தங்ககாசு பீரோ, கட்டில், தங்க நாணயம், வெள்ளிக் காசுகள், மெத்தை, டிவி, வாஷிங் மிஷின், மிக்ஸி, கிரைண்டர் போன்ற ஏராளமான பரிசுகள் வழங்கப்பட்டன. வாடிவாசல் அருகே 12 நோயாளர் காவுவண்டிகளும் தயார் நிலையில் நிறுத்தப்பட்டிருந்தன.

3 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். அவனியாபுரம் ஜல்லிக்கட்டு மதுரை அவனியாபுரத்தில் பொங்கலன்று நடந்த ஜல்லிக்கட்டில் 986 காளைகள் பங்கேற்றன. 573 மாடுபடி வீரர்கள் பங்கேற்றனர். இதில் 22 காளைகளை அடக்கிய மதுரை வலையங்குளத்தை சேர்ந்த பாலமுருகனுக்கு முதல்வர் ஸ்டாலின் சார்பில் கார் பரிசு வழங்கப்பட்டது.

சிறப்பாக விளையாடி பார்வையாளர்களைக் கவர்ந்த அவனியாபுரம் முத்துக்கருப்பன் காளையின் உரிமையாளருக்கு, துணை முதல்வர் உதயநிதி சார்பில் உளவியந்திரம் டர் பரிசாக வழங்கப்பட்டது.

# கிரீன்லாந்து அமெரிக்காவுக்குத் தேவை; ஆதரவளிக்காத நாடுகள் மீது வர்த்தக வரி

## ட்ரம்ப் எச்சரிக்கை



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கிரீன்லாந்தை கையகப்படுத்தும் தனது திட்டத்திற்கு ஆதரவளிக்காத நாடுகள் மீது வர்த்தக வரிகளை விதிக்கக்கூடும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் நேற்று நடைபெற்ற சுகாதாரம் தொடர்பான வட்ட மேசை மாநாட்டின் போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ட்ரம்ப், அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பிற்கு கிரீன்லாந்து மிக அவசியமானது என்று வலியுறுத்தினார்.

எமது திட்டத்திற்கு ஒத்துழைக்காத நாடுகள் மீது நான் வர்த்தக வரிகளை விதிக்கக்கூடும். தேசியப் பாதுகாப்பிற்கு கிரீன்லாந்து எங்களுக்குத் தேவை என்று அவர் குறிப்பிட்டார்.

கிரீன்லாந்தை கையகப்படுத்துவது அமெரிக்காவின் பாதுகாப்பு முன்னுரிமை என்றும் இதற்காக அமெரிக்க இராணுவத்தைப் பயன்படுத்துவது ஒரு தெரிவாகவே எப்போதும் இருக்கும் என்றும் வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

ட்ரம்ப்பின் இந்த நகர்வுகளுக்கு மத்தியில், பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளின் இராணுவத்தினர் கிரீன்லாந்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அங்கு நிலைநிறுத்தப்பட்டுள்ளனர்.

இருப்பினும், ஐரோப்பியப் படைகளின் இருப்பு தனது முடிவுகளில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது என ட்ரம்ப் தரப்பு தெரிவித்துள்ளது.

# ஹமாஸ் அமைப்பினர் முழுமையாக ஆயுதங்களைக் கைவிட வேண்டும்

## ட்ரம்ப் வலியுறுத்தல்



ஹமாஸ் அமைப்பு முழுமையாக ஆயுதங்களைக் கைவிட வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயத்தை தனது உத்தியோகபூர்வசமூகவலைதளத்தில்பதிவொன்றை பதிவிட்டு அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் பதற்றத்தைத் தணிக்க அமெரிக்காவின் முயற்சியால் எட்டப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தின் இரண்டாம் கட்டம் ஆரம்பமாகியுள்ளது.

இந்தநிலையில், ஹமாஸ் அமைப்பு தனது வசம் உள்ள அனைத்து ஆயுதங்களையும் ஒப்படைக்க வேண்டும் எனவும் பிணைக் கைதிகளின் உடல்களை உடனடியாகத் திரும்பத் தர வேண்டும் எனவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, அவர்கள் இதை மரியாதையான முறையில் செய்யலாம் என தெரிவித்த அவர் இல்லாவிட்டால் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

எகிப்து, துருக்கி மற்றும் கத்தார் ஆகிய நாடுகளின் ஒத்துழைப்புடன் ஹமாஸின் சுரங்கப்பாதைகளைத் தகர்க்கவும் கனரக ஆயுதங்களை அப்புறப்படுத்தவும் அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனுடன், காசாவின் சிவில் நிர்வாகத்தைக் கவனிக்க அமைதி வாரியம் ஒன்றை அமைக்க முடிவு செய்துள்ளதாகவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீன தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்ட இந்தக் குழுவிற்கு அந்நாட்டின் முன்னாள் துணை அமைச்சர் அலி ஷாத் தலைமை தாங்குவார் என அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வானில் பறந்தபோது உடைந்த வீழ்ந்த இஸ்ரேல் இராணுவ ஹெலிக்கொப்டர்



இஸ்ரேலின் தென்மேற்குக் கரைப் பகுதியில் அமைந்துள்ள பெத்லஹேமுக்கு கிழக்கே, கிசான் நகருக்கு அருகில் இன்று இஸ்ரேல் இராணுவ ஹெலிக்கொப்டர் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த ஹெலிக்கொப்டர் இந்த வார தொடக்கத்தில் எட்சியோன் பிரிகேட் பகுதியில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாகத் தரை இறக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், பழுதடைந்த குறித்த ஹெலிக்கொப்டரை மற்றொரு ஹெலிக்கொப்டர் மூலம் கட்டி இழுத்துச் சென்றபோது, அது திடீரென உடைந்து சிதறி தரையில் விழுந்து விபத்துக்குள்ளானதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது

இந்த விபத்தின் போது ஹெலிக்கொப்டர் பல துண்டுகளாக உடைந்த போதிலும், அதிர்ஷ்டவசமாக எவருக்கும் காயங்களோ அல்லது உயிர்ச்சேதங்களோ ஏற்படவில்லை என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்துத் தொடர்பாக முறையான விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு இஸ்ரேல் விமானப்படைத் தளபதி உத்தரவிட்டுள்ளார். இதற்கென விசேட விசாரணைக்குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# இன்றைய ராசி பலன்கள்- 17.01.2026




இன்றைய முக்கியமான நிகழ்வுகளில் கவனம் செலுத்த வேண்டும்.

பணியிடச் சூழ்நிலை சாதகமாக உள்ளது. நல்ல பலன்கள் கிடைத்து மகிழ்வீர்கள்.

இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். முக்கியமான செயல்களை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடவும். எந்த சூழ்நிலையிலும் நம்பிக்கை இழக்காதீர்கள்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். இன்று பணியில் மூழ்கி இருப்பீர்கள். முறையாக திட்டமிடுவதன் மூலம் சிறப்பாக பணியாற்றலாம்.

நல்லுறவில் இணக்கம் குறைந்து காணப்படும். புரிந்துணர்வும் அனுசரனையும் இருந்தால் சரிகட்டிவிடலாம்.

இன்று வரவும் செலவும் சேர்ந்தே காணப்படும்.




ஆன்மீக காரியங்களில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வது உங்களுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக்கும். நீங்கள் முன்னேற்றத்தைக் காண்பீர்கள்.

பணியில் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற முடியாத காரணத்தால் அதிருப்தி நிலவும்.

ஒற்றுமை குறைந்து காணப்படும். அனுசரித்து நடந்து கொள்ளவேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி சாதகமாக இல்லை. இன்று நிதிநிலையை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

பாதுகாப்பற்றதாக உணர்வதால் ஆரோக்கியம் பாதிக்கப்படும். இரவில் உறக்கமின்மை ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சுமாராக இருக்கும். செலவுகள் அதிகமாக காணப்படும். நன்கு திட்டமிட்டால் பணத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.




உங்கள் வாழ்வில் செழிப்பைக் காண்பதற்கு நீங்கள் விஷயங்களை நல்ல முறையில் திட்டமிடல் வேண்டும்.

வேலையின் போது பதற்றம் காணப்படலாம். பணிச் சுமையயை சமாளிக்க வேண்டியிருக்கும்.

குடும்ப உறவில் அன்பு குறைந்து காணப்படும். நெருக்கமானவர்களுடன் பேசும் பொழுது கவனமாகப் பேச வேண்டும்.

இன்றைய நாள் நிதி வளர்ச்சிக்கு சாதகமாக இல்லை. இன்று உங்களால் கணிசமான தொகை சேமிக்க இயலாது. இன்று உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும்




எதிர்பாராத நிகழ்வுகள் நடக்கும். விஷயங்களை வேறு விதமாக அணுகுவது நல்லது. பயனுள்ள முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

பணிச் சூழல் சவாலானதாக இருக்கும். பணிகளில் தவறுகள் நேர வாய்ப்பு உள்ளது. இதனை நீங்கள் தவிர்க்க வேண்டும்.

உங்கள் துணையிடம் நேர்மையான அணுகுமுறையை கையாள்வீர்கள். அவருடன் நீங்கள் அன்பு பாராட்டி பழகுவீர்கள். இது ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்கும்.

நிதிவளர்ச்சி இன்று சிறப்பாக காணப்படும். கடின முயற்சி மூலம் தான் நீங்கள் பலனை அதுவும் தாமதமாகத் தான் அடைய முடியம்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். நல்ல ஆரோக்கியத்தை தக்க வைத்துக் கொள்ள தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று மிகவும் துடிப்பான நாள். இன்று வெற்றிக்கு அடிகோலும் நாள். சுய வளர்ச்சிக்கான முயற்சிகளை எடுப்பீர்கள்.

பணிகளை குறித்த காலத்துக்குள் முடிப்பீர்கள். நீங்கள் சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். உங்கள் முயற்சிக்கான பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் சரியான நெறிமுறையை பின்பற்றுவீர்கள். அதன் காரணமாக அவரை நீங்கள் நன்றாக புரிந்து கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக காணப்படும். பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்வீர்கள்.

உங்களின் தைரியமான மனநிலை உங்களை இன்று ஸ்திரமான ஆரோக்கியத்துடன் வைத்திருக்கும்.




இன்று சாதகமான அல்லது மகிழ்ச்சியான நாளாக அமையாது.

பணிகளில் பொறுப்புகளை ஏற்க நேரிடும். பணியில் கவனம் தேவை. இது உங்கள் நலனை மேம்படுத்த வழிகாட்டும்.

உங்கள் மனதில் உள்ள குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் சூடான வாக்குவாதத்தில் நீங்கள் ஈடுபடலாம். இது உறவின் ஸ்திரத்தன்மையை பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை ஆரோக்கியமாக காணப்படாது. செலவுகள் காரணமாக பணப்பற்றாக்குறை காணப்படும்.

தாயின் ஆரோக்கிய குறைபாடு காரணமாக பணம் செலவு செய்ய நேரிடலாம். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசியம். நம்பிக்கையுடன் செயல்பட்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று அதிக பணிச்சுமைகள் காணப்படும். நீங்கள் திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும்.

உங்களின் அகந்தைப் போக்கு உங்கள் துணை யுடனான பிணைப்பை பாதிக்கும். உங்கள் கடுமையான வார்த்தைகள் அவரை பாதிக்கும். உங்கள் பிரிய மானவருடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண வரவிற்கான வாய்ப்பு குறைவு.




இன்று மகிழ்வாக இருப்பதற்கு சாதகமான நாளாக அமையாது. ஆன்மீகப் பயணங்கள் ஆறுதல் தரும். இன்றைய சவால்களை தன்னம்பிக்கையுடனும் உறுதியுடனும் எதிர்கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியில் கூடுதல் பொறுப்புகள் ஏற்க நேரும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் இருவரிடையே கருத்து வேறுபாடு காணப்படும் இதனால் உங்கள் துணையுடன் சிறந்த உறவை பராமரிக்க இயலாது.

பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை சாதுர்யமாகவும் கவனமாகவும் கையாள வேண்டும்.

மன உளைச்சல் காரணமாக இன்று கால் வலி உபாதைகள் ஏற்படலாம்.

# இன்றைய ராசி பலன்கள்- 17.01.2026




இன்று மனதில் பதற்றடங்கள் அதிகமாக காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பது அல்லது புதிய முயசிகள் தவிர்க்கப்பட வேண்டும். பிரார்த்தனை மற்றும் தியானம் ஆறுதல் தரும்.

பணிகளைக் கையாள்வது சவாலாக இருக்கும். நேரம் செலவு ஆகும். உங்கள் கீழ் பணி புரிபவர்களுடன் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் பொறுமை அவசியம்.

மனதில் இருக்கும் பட்ட நிலை காரணமாக உங்கள் துணையுடன் விவாதத்தில் ஈடுபடுவீர்கள். அமைதியாக உங்கள் உணர்வுகளை உங்கள் பிரியமான்வரிடம் வெளிப்படுத்த வேண்டும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமானதாக இருக்காது. இழப்புகளைத் தவிர்க்க பணத்தை பாதுகாக்க வேண்டும்.




உங்கள் மனதில் இருக்கும் குழப்பம் காரணமாக இன்று சிறிது அமைதியின்மை காணப்படும். இது உங்கள் முடிவெடுக்கும் திறமையை பாதிக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது கவனம் தேவை. இல்லாவிடில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இது சிக்கலுக்கு வழி வகுக்கும்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்தணர்வு காணப்படும். இதனால் வாக்கு வாதங்கள் ஏற்படும். இத்தகைய சூழ்நிலையை தவிர்ப்பது நல்லது.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. திட்டமிடலின்மை காரணமாக நீங்கள்சில பிரச்சினைகளை சந்திக்க நேரும்.




இன்று வளர்ச்சி குறைந்து காணப்படும். உங்கள் பணிகளை விரைவாக ஆற்ற இயலாத நிலை காணப்படும். இன்று சோம்பலும் மந்தத் தன்மையும் காணப்படும்.

இன்று கொடுக்கப்பட்ட பணிகளை முடிக்க இயலாத நிலை காணப்படும். பணிகள் அதிகமாக காணபப்டுவதே இதற்கு காரணமாக இருக்கும். எனவே பணிகளை திட்டமிட்டு முறையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படாது. புரிந்துணர்வின்மை காரணமாக தேவையற்ற கருத்து வேறுபாடு எழும்.இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு கை கொடுக்காது. இதனால் கூடுதல் பணம்சம்பாதிக்கும் பல வாய்ப்புகளை இழப்பீர்கள்.




இன்று உங்கள் விருப்பத்துக் கேற்ப முக்கிய முடிவுகளை உங்களால் எடுக்க இயலும். உங்கள் தன்னம்பிக்கை அதிகமாகக் காணப்படும். நீங்கள் எதையோ சாதித்தது போல் உணர்வீர்கள்.

கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் உங்களுக்கு வெற்றியை பெற்றுத்தரும். உங்களுள் இருக்கும் திறமைகளை பணியிடத்தில் வெளிபடுத்துவீர்கள்.

உங்களின் நேர்மையான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இந்தப் போக்கின் காரணமாக உறவின் பிணைப்பு வலுப்படும். மனம் திறந்து பேசுவதன் மூலம் இருவரிடையே இருக்கும் இடைவெளி குறையும்.

# 617 கிலோ பீடி இலைகள் கற்பிட்டியில் சிக்கின



**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

இலங்கை கடற்படை, பொலிஸாருடன் இணைந்து, கற்பிட்டி கண்டக்குளி குடா பகுதியில் கடந்த புதன்கிழமை ஒரு சிறப்பு சோதனை நடவடிக்கையை மேற்கொண்டதன் மூலம், சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டு வரப்பட்டு விநியோகிப்பதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த சுமார்617 கிலோகிராம் பீடி இலைகளுடன் கப் வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.

வடமேற்கு கடற்படை கட்டளையைச் சேர்ந்த இலங்கை கடற்படை கப்பல் விஜய நிறுவனம், கற்பிட்டி பொலிஸாருடன் இணைந்து நடத்திய இந்த சிறப்பு சோதனை நடவடிக்கையின் போது, கற்பிட்டி கண்டக்குளி குடா பகுதியில் சந்தேகத்திற்கிடமான ஒரு கப் வாகனன் சோதனை செய்யப்பட்டது.

இந்த நடவடிக்கையின் போது, சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டு வரப்பட்டு விநியோகிப்பதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த சுமார் 617 கிலோகிராம் பீடி இலைகளுடன் அந்த கப் கைப்பற்றப்பட்டது.

கப் வாகனன் மற்றும் பீடி இலைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கற்பிட்டி பொலிஸ் நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.